[1973 மார்ச் 1

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பெரும்பாலான அகதிகள் கையில் பணமாகத்தான் கேட்கிறார்கள். சில பேர்கள் அதை வைத்து வீடு கட்டிக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் பொருள்களாகக் கொடுப்பதற்கான ஒரு யோசனை உண்டு. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை.

இலச்சிவாக்கம் அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்

*** 196 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர் திட்ட வேலை நடைபெறுகிறதென்று அறிவித்துள்ளார். இவ்வேலை இன்னும் 3 மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த வேலை சென்ற ஆண்டே எடுத்துக் கொள்ளப்படப் போவதாக இருந்தும் இப்பொழுதுதான் துவங்கப்பட்டு இருக்கிறது. கட்டாயம் இந்த ஆண்டு எடுத்து நிறைவேற்றப்படக்கூடிய வகையில் சிறப்பாணை ஒன்று அரசு பிறப்பிக்க முன்வருமா? அங்கே ஆய்வுப் பணிகளை எடுத்துக்கொள்ள உரிய அலுவலாளர்கள் இல்லை என்று மாவட்ட நல அதிகாரிகள் கூறுகிறார்களே, எனவே, போதுமான அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நிச்சயமாக இந்த ஆண்டு முடிவடையும். மூன்று மாதங்களில் செய்ய வேண்டுமென்றால் குறைந்தது ஆறு மாதத்திற்குள்ளாவது—1973 ஆம் ஆண்டிலே முடிந்துவிடும். எனவே, அது பற்றி உறுப்பினர் அவர்களுக்குச் சந்தேகம் வேண்டாம். போதுமான அதிகாரிகள் இல்லாதது காரணம் என்று சொல்கிறார்கள். அது காரணமில்லை. போதுமான இடம் தேவைதானா என்பதுபற்றித்தான் முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. வீ. செல்லதுரை : அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் எந்த அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகிறது?

1973 மார்ச் 1]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பெருவாரியான அரிசன மக்கள் இருக்கின்ற இடங்களிலே, 500-க்கு மேற்பட்ட மக்கள் இருக்கக்கூடிய இடங்களிலே நாம் திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அதற்காக கிணறுகள் வெட்டப்படுகின்றன. அதற்கு மேற்பட்ட மக்கள் இருப்பார்களானால் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டப்பட்டு தண்ணீர் வழங்கப்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை: அரிசனக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தொட்டி கட்டித் தருவதில்லை. தரை மட்டத் தொட்டிதான் கட்டுகிறார்கள். மேல் நிலை நீர்த் தொட்டி கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சில இடங்களிலே தரை மட்ட தொட்டி கட்டித்தரப்படுகிறது. சில இடங்களிலே மேல்நிலை நீர் தொட்டி கட்டித்தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்த இடங்களில் மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரம் கேட்டால் விவரம் சொல்லலாம்.

வேலைவாய்ப்புகள் குறித்த ஆய்வு

* 198 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறுகிய காலத்தில் வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கான யோசனை கூற திரு. பி. பகவதி அவர்கள் தலைமையில் வேலையின்மை ஆய்வுக் கமிஷன் ஒன்றினை மத்திய அரசு அமைத்துள்ளது பற்றி நமது மாநில அரசுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டதா?

(இ) அக்குழுவினர் வேலையின்மையைப் போக்க தெரிவித்துள்ள திட்டங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில்@ விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, வேலையின்மைகுறித்து ஆராய்வதற்காக பகவதி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து அந்தக் குழு இன்னும் அறிக்கையை அளிக்கவில்லையென்றாலும் இடைக்கால அறிக்கை ஒன்றை அது அளித்திருப்பதாகவும் அதனுடைய பிரதியொன்று நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அது பரிசிலனையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவற்றிலே எவையெவை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

@ 389-394-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS